# தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

எண்.19A, ருக்மினி லட்சுமிபதி சாலை, எழும்பூர், சென்னை – 600 008

Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377

Email : tnerc@nic.in Web site : www.tnerc.tn.nic.in.


**நாள் : 11.12.2014**

## செய்தி வெளியீடு

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், தானாக முன்வந்து மின் கட்டணம் (electricity tariff) மற்றும் மின் செலுத்துதல் கட்டணங்களை (Transmission tariff) மாற்றி அமைப்பது தொடர்பான பொது அறிவிப்பினை 23–9–2014 மற்றும் 24–9–2014 அன்று முன்னோடி செய்தித்தாள்களிலும் ஆணையத்தின் இணையதளத்திலும் வெளியிட்டு பொதுமக்கள் / சம்மந்தப்பட்ட நபர்களின் ஆட்சேபனைகள் / ஆலோசனைகள் கோரப்பட்டன. ஆட்சேபனைகள் / ஆலோசனைகள் அனுப்புவதற்கான கடைசி நாள் 31–10–2014 என நிர்ணயம் செய்யப்பட்டது. ஆணையத்தின் மின் கட்டணம் மற்றும் மின் செலுத்துதல் கட்டணங்களை மாற்றியமைப்பதற்கான செயற்குறிப்பு 13–10–2014 அன்று தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் மாநில ஆலோசனைக் குழுவின் 28வது கூட்டத்திலும் விவாதிக்கப்பட்டது. ஆணையத்தின் இந்த செயற்குறிப்பு மீது பொதுமக்கள் / சம்மந்தப்பட்ட நபர்களின் ஆட்சேபனைகள் / ஆலோசனைகள் பெறுவதற்காக பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டங்கள் 24–10–2014 அன்று சென்னையிலும், 28–10–2014 அன்று திருநெல்வேலியிலும் மற்றும் 31–10–2014 அன்று ஈரோட்டிலும் நடத்தப்பட்டன.

பொதுமக்கள் / சம்மந்தப்பட்ட நபர்களிடமிருந்து பெறப்பட்ட ஆட்சேபனைகள் / ஆலோசனைகளை கருத்தில் கொண்டு பல்வேறு மின்நுகர்வோர் வகையினருக்கான மின் கட்டணம் மற்றும் தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகத்திற்கான மின் செலுத்துதல் கட்டணங்களை பின்னினைப்பில் கண்டுள்ளவாறு 12.12.2014 முதற்கொண்டு நடைமுறைக்கு வருமாறு ஆணையம் மாற்றி அமைத்துள்ளது. இந்த மின் கட்டண உயர்வு அனைத்து நுகர்வோர் வகையினருக்கும் 15 விழுக்காடு அளவு இருக்கும்.

**செயலாளர்**

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

சென்னை – 600 008